## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆவணித் திங்கள் 06–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.193/2015 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.08/2025**

**1.குப்பாயி**
**2.பாக்கியம்**
**3.பெரியம்மாள்**
**4.பாப்பாத்தி**
**5.போதம்மாள்**
**6.பெரியசாமி**
**7.சின்னசாமி**
**8.பூங்கொடி ... மனுதாரர்கள்/வாதிகள்.**

**–எதிர்–**

**1.ஆராயி(எ) பாக்கியம்**
**2.செல்வம்**
**3.சாந்தி**
**4.வெங்கடேஸ்**
**5.ஜெயபிரகாஷ்**
**6.நீலாவர்ணம்**
**7.பரமசிவம்**
**8.ராமாயி**
**9.மாது**
**10.V.G.அருண்**
**11.அங்கமுத்து**
**12.பரிமளா**
**13.சரண்யா**
**14.தீபிகா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனு இன்று (22.08.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. K. M. ஜெயபால்** அவர்களும் 01 முதல் 09, 11 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில் 10-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. K. S. மொஹமத் மொகிதீன்** அவர்களும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை

நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பினர்களாக இல்லாத எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பினர்களாக இருந்து நிறைவேற்றிக் கொண்ட 04 உரிமை -மாற்ற ஆவணங்கள் குறித்து வழக்குரையில் சொல்லப்பட்டிருந்தாலும் அவைகள் குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோராததால் தற்போது அத்தகைய விளம்புகை பரிகாரங்களை வழக்குரையில் புகுத்துவதற்காக வழக்குரையில் திருத்தம்செய்வதற்கு அனுமதி வழங்க கோரி மனுதாரர்கள்/ வாதிகள் உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **06**-ஆம் வகுமுறையின் **17**-ஆம் விதியின்கீழ் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர்.

### மனுவின் சுருக்கம்

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் வாதிகள் ஆவர். 06-ஆம் மனுதாரர்/வாதி தனக்காகவும் மற்ற மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

02. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது பிரதிவாதிகள் மட்டும் தரப்பினராக இருந்து நிறைவேற்றிக் கொண்ட உரிமைமாற்ற ஆவணங்கள் குறித்து ஏன் குறிப்பாக விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்று வினா தொடுத்து விசாரித் -துள்ளனர். அந்த ஆவணங்கள் யாவும் இல்லாநிலையன என்பதால் அவைகள் குறித்து மனுதாரர்கள்/வாதிகள் வழக்குரை தாக்கல்செய்தபோது நிவாரணம் கோரவில்லை. அத்தகைய ஆவணங்கள் குறித்துப் பரிகாரங்கள்

கோரப்படவில்லை என்ற காரணத்திற்காக வழக்குப் பாதிக்கப்படக்கூடாது என்பதால் அந்த ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரு -வதற்காக முன்னெச்சரிக்கையாக மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவை தாக்கல்செய்கின்றனர்.

03. ஆகையால், இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்களை வழக்குரையில் புகுத்துவதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

04. 01 முதல் 09 வரையிலான எதிர்மனுதாரர்களும், 11 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்களும் முதலேற்பு வழக்கில் தோன்றாத் தரப்பினராக உள்ளனர். 10-ஆம் எதிர்மனுதாரர் தாக்கல்செய்துள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு. மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கை எதிர்த்து 10-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி விளக்கமான எதிர்வழக்குரை தாக்கல்செய்தார். இவ் வழக்கு 2015-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. 20.01.2016-ஆம் தேதியன்று 10-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல்செய்தார். அந்த எதிர்வழக்குரையிலேயே மனுதாரர்கள்/ வாதிகள் தற்போது சொல்லும் ஆவணங்கள் குறித்து மறுப்பு தெரிவித் -துள்ளார். இந்நிலையில் 10 ஆண்டுகள் கழித்து அந்த ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டும் என்று சொல்லி மனுதாரர் காலதாமத -மாக இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். வழக்கை காலதாமதப் -படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு மட்டுமே இந்த மனு தாக்கல் செய்யப்பட் -டுள்ளது. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்துக்கள் மாரிமுத்து (எ) முத்துசாமி என்பவருக்கு பூர்வீக சொத்துக்கள் என்றும் அவர் இறந்தபின் அவருடைய 03 மகன்கள் கூட்டாக அடைந்து பாகம் பிரித்துக்கொள்ளாமல் அனுபோகம் செய்துவந்தனர் என்றும் முத்துசாமியின் 03 மகன்களில் ஒரு மகன் பெரம்பகவுண்டரின் வாரிசுகள்தான் மனுதாரர்கள்/வாதிகள் என்றும் வழக்குச் சொத்தில் 1/3 பாகம் பெறுவதற்கு வாதிகளுக்கு உரிமை உண்டு என்றும் சாட்டுரைசெய்து வாதிகள் வழக்குரை தாக்கல்செய்துள்ளனர். மேலும் 2015-ஆம் அண்டு இந்த வழக்கை தாக்கல் செய்வதற்குமுன்னர் பிரதிவாதிகள் 12.09.2003-ஆம் தேதியன்றும் 02.07.2004-ஆம் தேதியன்றும் 07.11.2007-ஆம் தேதியன்றும் 08.10.2007-ஆம் தேதியன்றும் 04 உரிமை மாற்ற ஆவணங்களை வாதிகளுக்கு தெரியாமல் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்றும் அவைகள் அடிமுதலே செல்லாது என்றும் வழக்குரையில் கூறியுள்ளனர்.

07. வழக்குரையில் நிவாரணம் கோரும்போது வழக்குச் சொத்தை 03 பாகமாக பிரித்து ஒரு பாகத்தை மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்க வேண்டுமென்று மட்டுமே நிவாரணம் கோரியுள்ளனர். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள மேற்சொன்ன 04 ஆவணங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் எதுவும் மனுதாரர்கள்/வாதிகளால் கோரப்படவில்லை.

08. வாதிகளின் வழக்கை 10-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மட்டுமே எதிர்த்து எதிர்வழக்குரை தாக்கல்செய்து நடத்திவருகிறார். அவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வழக்குச் சொத்துக்கள் முத்துசாமி மற்றும் அவருடைய மகன்களின் பூர்வீக சொத்துக்கள் என்றாலும் முத்துசாமியும் அவருடைய வாரிசுகளும் வழக்குச் சொத்துக்களை 13.12.1969-ஆம் தேதியன்று அடைமானம் வைத்துக் கடன் பெற்றதாகவும் அடைமான கடனை அடைக்காததால் அந்தச் சொத்துக்கள் நீதிமன்றத்தில் ஏலம் விடப்பட்டதாகவும் ஏலத்தில் முத்துசாமியின் மகன்களில் இருவரான பெரியதம்பியும் பரமசிவமும் மட்டும் கலந்துகொண்டு தொகை செலுத்தி ஏலம் எடுத்ததாகவும் அதனால் வழக்குச் சொத்துக்களில் முத்துசாமியின் மகன்களில் ஒருவரான பெரம்பகவுண்டரின் வாரிசுகளான வாதிகளுக்கு 1/3 பாகம் பெறுவதற்கு உரிமை இல்லை என்றும் வழக்குச் சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்பட்டுள்ள உரிமைமாற்ற ஆவணங்கள் அனைத்தும் செல்ல தகுந்தது என்றும் எதிர்வாதம் செய்துள்ளனர்.

09. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தற்போது திருத்தத்தின் மூலம் புகுத்தக் கோரும் சங்கதிகளும் நிவாரணங்களும் முற்றிலும் புதிதானவை அல்ல. இந்தத் திருத்தங்களை அனுமதிப்பதால் வழக்கின் அடிப்படை மாறாது. மேலும் எதிர்மனுதாரர்களிடம் சேர்த்தடைந்திருக்கும் எவ்வித எதிர்வாதமும் பாதிக்கப்படாது.

10. மனுதாரர்கள்/வாதிகள் திருத்தத்தின் மூலம் புகுத்தக் கோரும் பரிகாரம் காலவரம்பு சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 04 ஆவணங்களிலும்

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பினர்கள் இல்லை. இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 2015-ஆம் ஆண்டுதான் அந்த ஆவணங்கள் குறித்து தங்களுக்கு தெரியும் என்று கூறியுள்ளனர். அந்த ஆவணங்கள் குறித்து எதிர்வழக்குரையில் 2016-ஆம் ஆண்டே சொல்லப்பட்டதாகவும் இருப்பினும் மனுதாரர்கள்/வாதிகள் 03 ஆண்டுகளுக்குள் அந்த ஆவணங் -கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றும் அதனால் இந்த வழக்குச் காலவரம்புச் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் 10 ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் புரிந்துள்ளனர்.

11. இந்த வழக்கில் கோரப்படும் முதன்மையான நிவாரணம் பாகப்பிரிவினையாகும். இந்த வழக்கைத் தொடுப்பதற்கான கடைசி வழக்குமூலம் 15.07.2015-ஆம் நாள் எழுந்தது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. பாகதாரர் ஒருவரின் உரிமை மறுக்கப்பட்டதிலிருந்து 12 ஆண்டுகளுக்குள் பாகப்பிரிவினை வழங்கிட முடியும். அப்படி பார்த்தால் இந்த வழக்கிற்கான முதன்மை பரிகாரத்திற்கான காலவரம்பு 2027-ஆம் ஆண்டுவரை உள்ளது. தற்போது மனுதாரர் கோரும் விளம்புகை பரிகாரம முதன்மை பரிகாரத்திற்கு துணை பரிகாரமே. ஆகையால், மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள திருத்தம் காலவரம்பால் பாதிக்கப்பட -வில்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

12. 2016-ஆம் ஆண்டே தற்போது விளம்புகை பரிகாரம் கோரப்படும் ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி உறுதியாக மறுத்துள்ளார். அப்படி இருக்க உடனடியாக அந்த ஆவங்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் மிகவும் காலதாமதத்துடன் மனுதாரர்கள்/வாதிகள் தற்போது இந்த

மனுவை தாக்கல் செய்துள்ளனர். அந்த ஆவணங்கள் குறித்து வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரை குறுக்குவிசாரணை செய்தபோது கேட்டதால்தான் தற்போது மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து நிவாரணங்கள் கோர வேண்டியுள்ளது என்று மனுதாரர்கள்/வாதிகள் சொல்லியுள்ள காரணம் பொருத்தமற்றதாக உள்ளது.

13. மனுதாரர் இந்த மனுவில் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 04 ஆவணங்களும் இல்லைநிலையன என்று அந்தந்த ஆவணங்கள் குறித்து சொல்லப்பட்டுள்ள பத்திகளில் திருத்தம் செய்ய வேண்டுமென்று கோரி -விட்டு நிவாரணம் கோரும்போது மட்டும் 2003-ஆம் ஆண்டு ஆவணத்தை விட்டுவிட்டு மற்ற 03 ஆவணங்களை பொருத்து மட்டுமே நிவாரணம் கோரி -யுள்ளார். இந்த மனு அனுமதிக்கப்பட்ட பிறகு வழக்கை மீண்டும் தொடர -விடாமல் அந்த ஆவணத்தையும் இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக் கோரி மீண்டும் ஒரு விண்ணபத்தை தாக்கல்செய்யலாம் என்ற நோக்கத்துடன்தான் அந்த ஆவணம் குறித்து மனுதாரர்கள்/வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்று எதிர்மனுதாரர்/பிரவாதி தரப்பில் முன்வைத்துள்ள எதிர்வாதம் கவனிக்கத்தக்கது.

14. இதற்குமுன் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்த மனுவை அனுமதிக்கலாம் என்றாலும்கூட காலம கடந்து மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளதால் எதிர்மனுதாரர்/10-ஆம் பிரதிவாதிக்கு செலவுத்தொகை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனுவை அனுமதிப்பதே உகந்ததாக இருக்கும் என்று இந் நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த மனுவில் கோரப்படாத வழக்குரையில் 12-ஆம் பத்தியில்

சொல்லப்பட்டுள்ள 12.09.2003-ஆம் தேதியிட்ட ஆவணத்தையும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்ய கோரும் பரிகாரத்தையும் சேர்த்து வழக்குரையில் திருத்தம்செய்ய வேண்டுமென்று மனுதாரர்கள்/வாதிகளுக்கு இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது.

**இறுதிமுடிவு**

15. இறுதியாக, மனுதாரர்கள்/வாதிகள் 10-ஆம் எதிர்மனுதாரர்/10 ஆம் பிரதிவாதிக்கு 5,000/-(ஐயாயிரம் மட்டும்) உரூபாயை 29.08.2025 ஆம் தேதியன்றுக்குள் செலவுத்தொகையாக செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மேலும் இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்களுடன் கூடுதலாக வழக்குரையின் 12-ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 12.09.2003-ஆம் தேதியிட்ட ஆவண எண். 1877/2003-கொண்ட ஆவணம் குறித்தும் விளம்புகை பரிகாரம் கோரும் திருத்தத்தையும் அதை தழுவிய திருத்தங்களையும் வழக்குரையில் மேற்கொள்ள மனுதாரர்கள்/வாதிகளுக்கு இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:– இல்லை**

**உண்மை/வரைவு ஆணையுரை**
**வ.வி.எண்.08/2025 in மு.வ.எண்.193/2015**
**நாள் 22.08.2025**